**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC. No. 13/2024**
**Prosecution Witness : PW 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடேசன் | | : |
| Father / Husband Name | : செங்கமலம் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent. Counsel filed petition u/s.317 Cr.P.C. Petition heard and allowed.)

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **25/09/2024**

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறேன். கடந்த 25.01.2023ம் தேதி நான் மேற்படி நிலைய பணியிலிருந்த போது வாதி பெருமாள் என்பவர் மாலை 17.30 மணிக்கு கொடுத்த புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.53/2023 ல் இதச பிரிவுகள் 279, 338ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சம்பவ இடம் சாட்சிகளான பெருமாள், இந்திரா, பிரேம்ராஜ் ஆகியோர்களை விசாரித்து சம்பவம் உண்மை என ஊர்ஜிதம் ஆனதால் அவர்களிடம் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே மாலை 6.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லோகநாதன் மற்றும் அருண்குமார் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் அவர்களிடம் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், வழக்கில் காயமடைந்த நபர் மருத்துவமனையில் இறந்துவிட்டதால், நான் வழக்கினை காவல் ஆய்வாளர் வள்ளி என்பவரிடம் மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பினை சமர்ப்பித்தேன்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

வழக்கில் நான் காயம்பட்ட நபரை விசாரிக்கவில்லை என்றால் அவர் அந்த சமயம் மயக்க நிலையில் இருந்தார். அதனால் அவரை விசாரிக்கவில்லை. புகாரில் 2வது பத்தியில் புகார்தாரர் காயம்பட்ட நபரிடம் வழக்கு விவரம் குறித்து கேட்டு தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மயக்கநிலையில் இருக்கும் நபர் பேச முடியாது என்றால் சரிதான். நான்

WEB COPY

புகாரை மருத்துவமனையில் பெற்றுவிட்டு காவல் நிலையம் வர சுமார் அரை மணி நேரம் ஆனது. அவ்வாறு 5.30 மணிக்கு புகாரை பெற்றேன் என்றால், 6 மணிக்கு தான் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால், மருத்துவமனையிலிருந்து புகாரைப் பெற்றுவிட்டு, நிலையம் வந்து மாலை 5.30 மணிக்கு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மகஜர் சாட்சிகள் மாதிரி வரைபடத்தில் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த நேரம் சம்பவ இடத்தில் இருந்த நபர்களை தான் சாட்சியாக சேர்த்துள்ளேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல், காவல் நிலையத்தில் வைத்து மேஜை வேலை செய்தேன் என்றால் சரியல்ல.

WEB COPY